அல்லாஹ்வின் திருப்பெயரால்...

**DEENUL ISLAM HELPING GROUP**

**தீனுல் இஸ்லாம் உதவும் குழு**

எண்.4, குளத்துமேட்டுத்தெரு,
திட்டச்சேரி - 609 703.

DEENUL ISLAM HELPING GROUP

Regn.No.146/05 ***Website : www.deenulislamtty.weebly.com***

## இலவச வெளியீடு

அல்லாஹ்வின் பாதையில் நீங்கள் எதனை செலவு செய்தாலும் அதற்குரிய முழுமையான கூலி உங்களுக்கு வழங்கப்படும். மேலும் நீங்கள் ஒரு போதும் அநீதி இழைக்கப்படமாட்டீர்கள்

(அல்குர்ஆன் 8:60)

**ஹிஜ்ரி 1432 / ரமலான்மலர்**


## காரையில் மிகப் பெரியஷோரூம்!!!

Your Ever'16 A/C உங்கள் எவர் 16 A/C

*The Exculusive Branded Family Showroom*

# 57, Thirunallar Road, ( Opp.Muthupillai's Bakery) Karaikal - 609602.
Cell : 94434 88778 / E-mail : mmh@gmail.com/ website : ever16mmh.com



Cell : 88706 37600
99522 22978



# PENISULA

*Men's Wear*

*Available:*

**KAKA**
**CLASSIC POLO**
**INDIAN TERRAIN**
**REFUEL**
**LEMAX**
**CROSS COLOUR**
**HISTORY**
**AVIATOR**

60/1, Bharathiyar Street,
Karaikal - 609602.
U.T.of Puducherry.
Thameemul85@gmail.com

# ஜகாத்... ஸதகா... ஃபித்ரா...

''ஜகாத்'' எனும் சொல்லுக்கு வளர்ச்சி, தூய்மை ஆகிய பொருள்கள் அகராதியில் காணப்படுகின்றன. ஜகாத் வழங்குவதால் பொருள் வளர்ச்சி அடைவதுடன், தூய்மையும் அடைகிறது. மேலும், ஜகாத் வழங்குவோரின் பாவங்கள் மன்னிக்கப்பட்டு அவர்கள் தூய்மை அடைகிறார்கள்.

எவர்கள் நம்பிக்கைக் கொண்டு, நற்செயல்களைச் செய்து, தொழுகையைக் கடைபிடித்து, மார்க்க வரியையும் (ஜகாத்) கொடுத்து வருகிறார்களோ அவர்களுக்குரிய கூலி அவர்களின் இறைவனிடம் அவர்களுக்கு உண்டு. அன்றி அவர்களுக்கு எவ்வித பயமும் இல்லை ; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள். அல் குர்ஆன் 2:277

''இஸ்லாம், ஐந்தின் மீது எழுப்பப்பட்டுள்ளது.
(1) அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும், முஹம்மது (ஸல்) அவர்கள், அவனது அடியார் மற்றும் அவனது தூதர் என்றும் சான்று பகர்வது (2) தொழுகையைப் பேணுவது (3) ஜகாத்தைக் கொடுப்பது (4) ஹஜ் செய்வது (5) ரமலானில் நோன்பு நோற்பது'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் : இப்னு உமர் (ரலி)
நூல் : புகாரி, முஸ்லிம்

''ஜகாத்'' எனும் மார்க்க வரியானது அல்லாஹ்வையும், அவனுடைய தூதர் முஹம்மது (ஸல்) அவர்களையும் ஏற்றுக் கொண்ட இறை நம்பிக்கையாளர்களில் கொடுக்க தகுதியுடையவர்கள் மீது கட்டாயக் கடமையாக இருந்தும், நம்மில் பலர் அதை மறந்தவர்களாகவும், மறுத்தவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் ரப்புல் ஆலமீன் தனது திருமறையில் தொழுகையைப் போன்றே ''ஜகாத்''-தும் கட்டாயக் கடமை என்பதை பின்வரும் வசனங்களிலும், இன்னும் பிற வசனங்களிலும் குறிப்பிடுகிறான்.
''நீங்கள் தொழுகையை நிலை நிறுத்துங்கள், ஜகாத்தும் (மார்க்கவரி) கொடுத்து வாருங்கள். ருகூஉ செய்பவர்களுடன் நீங்களும் ருகூஉ செய்யுங்கள்'' அல் குர்ஆன் 2:43

PHONE : 04368-220605
CELL : 80121 64844
New HYPER TECH
COMPUTERIZED CELLPHONE SERVICE CENTER
3/2, PERAMASAMY PILLAI STREET, (SEETHARAMAN COMPLEX), KARAIKAL - 609 602.
எக்ஸ்சேஞ்ச் வசதியும் உண்டு - அனைத்து வகையான மொபைல்களும் குறைந்த விலையில் கிடைக்கும் - அனைத்து வகையான ரீ-சார்ஜ் கார்டுகளும் கிடைக்கும்.



**ஜகாத்தின் சிறப்பு:**

''சொர்க்கத்திற்கு என்னை நுழையச் செய்யும் செயலை எனக்கு கூறுங்கள்'' என நபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் கேட்டார். ''நீர் அல்லாஹ்வை வணங்குவீராக! அவனுக்கு எதையும் இணை வைக்காதீர்! ஐந்து நேர தொழுகையை நிறைவேற்றுவீராக! ஜகாத்தை கொடுப்பீராக! உறவினர்களை ஆதரிப்பீராக! என்று நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.
அறிவிப்பாளர் : அபூ அய்யூப் (ரலி) நூல் : புகாரி, முஸ்லிம்

தர்மம் செய்வதால் செல்வம் குறைந்துவிடாது''. (முஸ்லிம், திர்மிதி, அஹமது) மேலும்,
''ஜகாத் வழங்கும் மனிதன் கஞ்சத்தனம், பேராசை போன்ற இழிந்த துர்குணங்களின் கசடுகளிலிருந்து தூய்மைப்படுத்தப்படுகிறான். ஜகாத் வழங்குவதால் பல பாவங்களிலிருந்து அவன் பரிசுத்தமாக்கப்படுகிறான்'' ஃபத்ஹுல் பாரி 3/332

## தங்கத்திற்கான உச்சவரம்பு (நிஸாப்)

தங்கத்திற்கான நிஸாப் அளவு 20 மிஸ்கால் ஆகும். ஒரு மிஸ்கால் என்பது 4.374 கிராம் ஆகும். எனில் 20 மிஸ்கால் என்பது 87.48 கிராம் (சுமார் 11 சவரன்) ஆகும். இதில் 2 1/2 சதவீதமான 2.187 கிராம் ஜகாத்தாக அளிக்க வேண்டும்.

## வெள்ளிக்கான உச்சவரம்பு (நிஸாப்)

வெள்ளிக்கான நிஸாப் அளவு 5 ஊக்கியாக்கள் அளவு வெள்ளியிருந்தால் ஜகாத் கடமையாகும்.
1 ஊக்கியா = 122.472 கிராம்
5 ஊக்கியா = 612.36 கிராம்

இதில் 2 $^1/_2$ சதவீதமான 15.309 கிராம் வெள்ளியை ஜகாத் ஆக அளித்திட வேண்டும்.

## வேளாண் பயிர்களுக்கான உச்சவரம்பு (நிஸாப்)

5 வஸ்க்குகள் மகசூல் கிடைத்தால் ஜகாத் கடமையாகும்.

| | | |
|---|---|---|
| 1 வஸ்க் | = | 191.56 கிலோ கிராம் |
| 5 வஸ்க்குகள் | = | 957 கிலோ கிராம் |

இதில் நீர்ப்பாசனத்திற்கு செலவு செய்யாதிருப்பின் 10 % ஆன 95 கிலோ கிராம் ஜகாத்தாக வழங்க வேண்டும். நீர்ப்பாசனத்திற்கு செலவு செய்திருப்பின் 5 % ஆன 48 கிலோ கிராம் ஜகாத் கடமையாகும்.

## கால்நடைகளுக்கான உச்சவரம்பு (நிஸாப்)

- 40 ஆடுகளுக்கு ஒரு ஆடு ஜகாத் ஆகும்.

121 முதல் 200 வரை இருப்பின் இரண்டு ஆடுகள் ஜகாத் ஆகும். இதைப்போல் ஒவ்வொரு 100 ஆட்டுக்கும் ஒரு ஆடு வீதம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

- 30 மாடுகளுக்கு 1 வயதுள்ள ஒரு குட்டி ஜகாத்

40 மாடுகள் இருப்பின் 2 வயதுள்ள ஒரு குட்டி ஜகாத் ஆகும்.

- 5 ஒட்டகங்களுக்கு ஒரு ஆடு ஜகாத் ஆகும்.
- குதிரைக்கு ஜகாத் தேவையில்லை.
- புதையலில் ஐந்தில் ஒரு பங்கு ஜகாத் வழங்க கடமையாகும்.

**ஜகாத் கொடுக்க தகுதியுடையவர்கள்;**

தங்கம், வெள்ளி உள்ளிட்ட பொருட்கள், வேளாண் பயிர்கள், கால்நடைகள் ஆகிய மூன்று வகை செல்வங்களில் ஜகாத் கடமையாகும். அவை ஒவ்வொன்றுக்கும் விதிக்கப்பட்டுள்ள உச்சவரம்பை (நிஸாப்) அவை அடைந்து, தேவைகள் மற்றும் செலவீனங்கள் போக எஞ்சியிருப்பவற்றில் 2.5 % (இரண்டரை) ஜகாத் அளிப்பது கடமையாகும். தங்கம், வெள்ளி, ரொக்கப்பணம் ஆகியவற்றில் அவை ஓராண்டு காலம் கைவசம் இருந்தால் மட்டுமே ஜகாத் கடமையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. வேளாண்மை பயிர்கள், கால்நடைகளில் இந்த நிபந்தனை கிடையாது.

''ஒருவன் ஒரு பொருளைப் பெற்றுக் கொண்டால் அப்பொருளின்மீது ஒரு வருடம் சுற்றி வரும் வரை அப்பொருளுக்கான ஜகாத் அவன்மீது கடமையில்லை ''

அறிவிப்பாளர் : அலீ (ரலி) நூல் : ஸுனன் அபூ தாவூத், பைஹகீ

**ஜகாத் பெற தகுதியானவர்கள்:**

அல்லாஹ் கூறுகிறான்;

''தானமெல்லாம் வறியவர்களுக்கும், ஏழைகளுக்கும், தானத்தை வசூலிப்பவர்களுக்கும், புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்களுக்கும், அடிமைகளை விடுதலை செய்வதற்கும், கடனில் மூழ்கியவர்களுக்கும், அல்லாஹ்வுடைய பாதையில் போர் செய்வதற்கும், வழிப்போக்கர்களுக்கும் அல்லாஹ் ஏற்படுத்தியதாகும். அல்லாஹ் மிக அறிந்தவனும், ஞானமுடையவனாகவும் இருக்கின்றான் '' அல் குர்ஆன் 9:60

**ஜகாத் கொடுக்காதவர்களுக்கான தண்டனை**

அல்லாஹ் கூறுகிறான்,

''நம்பிக்கையாளர்களே! பாதிரிகளிலும், சந்நியாசிகளிலும் பலர் மக்களின் பொருட்களைத் தவறான முறையில் விழுங்கி வருவதுடன் அல்லாஹ்வுடைய பாதையில் செல்வதையும் தடை செய்கின்றனர். இன்னும் எவர்கள் தங்கத்தையும், வெள்ளியையும் சேகரித்து வைத்துக் கொண்டு, அதை அல்லாஹ்வுடைய பாதையில் செலவு செய்யாதிருக்கின்றனரோ அவர்களுக்கு (நபியே!) நீங்கள் வற்புறுத்தும் வேதனையை நற்செய்தியாகக் கூறுங்கள் ''



(தங்கம், வெள்ளியாகிய) அவற்றை நரக நெருப்பில் பழுக்கக் காய்ச்சி அவற்றைக் கொண்டு அவர்களுடைய நெற்றிகளிலும், அவர்களுடைய விலாக்களிலும், அவர்களுடைய முதுகுகளிலும் சூடிட்டு ''உங்களுக்காக நீங்கள் சேகரித்து வைத்திருந்தவை இவைகள்தான், ஆகவே, நீங்கள் சேகரித்து வைத்திருந்த இவற்றை சுவைத்துப் பாருங்கள் '' என்று கூறப்படும் நாளை (நபியே! நீங்கள் அவர்களுக்கு ஞாபகமூட்டுங்கள்) அல் குர்ஆன் 9:34, 35

**ஃபித்ரா (நோன்பு பொருநாள் தர்மம்)**

''சிறியவர், பெரியவர், சுதந்திரமானவர்; அடிமை அனைவரின் மீதும் ஒரு ஸாவு அளவு பேரீச்சம் பழமோ அல்லது ஒரு ஸாவு தீட்டாத கோதுமையையோ நோன்புப் பெருநாள் தர்மமாக ஏழைகளுக்கு வழங்க வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் கடமையாக்கினார்கள் ''

அறிவிப்பாளர் : இப்னு உமர் (ரலி) – நூல் : புஹாரி (1512)

நபி (ஸல்) அவர்கள் காலத்தில் மதினாவில் வழக்கத்தில் இருந்து வந்த ''ஸாவு '' என்பது நிறுத்தலளவையில் 2.135 கிலோ கிராம் (2.360 லிட்டர்) ஆகும். தோல் நீக்கப்பட்ட கோதுமையாக இருப்பின் இதில் பாதி அளவு (2 முத் = 1066 கிராம்) ஆகும்.

பெருநாள் தொழுகைக்கு முன்பே ஃபித்ராவை வழங்குமாறு வந்துள்ள கட்டளை:

''மக்கள் பெருநாள் தொழுகைக்கு புறப்படுவதற்கு முன்பே நோன்பு பெருநாள் தர்மம் (ஃபித்ரா) வழங்கப்பட வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள் ''

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் உமர் (ரலி)நூல் : முஸ்லிம் (1801)

எனவே, நம் பகுதியில் உணவுக்கு பயன்படுத்தும் பொருள் அரிசியாக இருப்பதால் ஒரு நபருக்கு கொடுக்க வேண்டிய அரிசியின் அளவின் தொகையை தோராயமாக **ரூ.60/-** என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆகவே மேற்கூறிய நபிமொழியின் அடிப்படையில் ''ஸதக்கத்துல் பித்ரை '' கொடுத்து அல்லாஹ்விடம் நற்கூலியை பெற்றிடுங்கள்.

இன்று சமுதாயத்தில் தன்னுடைய சிறிய தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய இயலாதவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இச்சிறிய தேவைகள் அதிகரித்து பெரிய சுமையாக மாறி இவர்கள் மிகப் பெரிய பாதிப்புக்குள்ளாகிறார்கள். எனவே இதை கருத்தில் கொண்டு நமது **தீனுல் இஸ்லாம் உதவும் குழு** பாரபட்சம் பாராமல் அனைத்து தரப்பு மக்களுக்கும் கீழ்கண்டபடி உதவிகள் செய்து வருகிறது.

**தீனுல் இஸ்லாம் செயல்பாடுகள்**

1. சிறு சிறு மருத்துவ உதவிகள்
2. வட்டியில்லா கடனுதவிகள்
3. இரத்ததானம் செய்தல்

4. சிறிய முதலீட்டில் தொழில் தொடங்க உதவி செய்தல்

5. வருடத்தில் ஒருமுறை மிகவும் வறியவர்களின் பிள்ளைகளுக்கு கத்னா செய்தல்

6. தன் வீடுகளை, புதுப்பித்து கட்டுவதற்கோ, கீற்றுகள் கூட மாற்ற இயலாத நிலையில் (குடிசை வீடுகளில்) உள்ளவர்களுக்கு, வீடுகளைப் புதுப்பித்தோ, கீற்றுகள் மாற்றியோ உதவி செய்தல்

7. மிகவும் பின் தங்கிய ஏழை மாணவர்களுக்கு அவர்களின் பள்ளிக்கல்வி கட்டணம், நோட்டு, புத்தகங்கள், பள்ளி சீருடைகள் போன்றவைகளுக்காக உதவுதல். மேலும், ஏழை மாணவர்களுக்கு மார்க்கக் கல்வி கற்க குர்ஆன் மற்றும் அரபி பாடப் புத்தகங்கள் வழங்குதல்.

8. இஸ்லாத்தை புதிதாக ஏற்பவர்களுக்கு அவர்களின் இஸ்லாமிய கல்வி கற்பதற்கான உதவிகளையும் மற்றும் ஆரம்ப உதவிகளையும் செய்தல்

9. பிரயாணத்தில் இருப்பவர்களும், வழிபோக்கர்களும், தங்கள் உடமைகளை பறிகொடுத்துவிட்டு தவிக்கும் சூழ்நிலையில் அவர்களின் உண்மை நிலையை ஆராய்ந்து அவர்கள் தங்கள் ஊர்களுக்கு திரும்ப உதவி செய்தல்.

மேலும் பல உதவிகளை மக்களுக்கு **தீனுல் இஸ்லாம் உதவும் குழு** வழங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. எமது உதவும் குழுவினால் பலரும் பயனடைந்துள்ளனர். இன்ஷா அல்லாஹ் மேலும் பலர் தொடர்ந்து பயனடைய தங்களின் ஜகாத், ஸதகா ஃபித்ராவை சரியான முறையில் தகுதியான நபர்களுக்கு வழங்கிட **தீனுல் இஸ்லாம் உதவும் குழு**விற்கு வழங்கி தங்களின் உயரிய ஆலோசனைகளையும், ஆதரவினையும் தந்து இறைவழியில் எங்களுக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

*******

# இத்தா ஓர் இருட்டறையா?

இத்தா என்பது கணவனை இழந்த பெண்ணின் மறுமணம் செய்து கொள்ளும் கால இடைவெளி ஆகும். இது 4 மாதம் 10 நாட்களாகும். ஆனால் 40 நாட்கள் இருந்தால் போதும் என்றும் இந்த நாட்களில் அப்பெண் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதிலும் கருத்துகள் பல உள்ளது. இது மக்களின் அறியமையால் தான் இது பற்றி திருக்குர்ஆனில் தெளிவாக உள்ளது.

உங்களில் எவரேனும் மனைவியரை விட்டு மரணித்தால் நான்கு மாதங்களும் பத்து நாட்களும் (மறுமணம் செய்யாமல்) அப்பெண்கள் காத்திருக்க வேண்டும். அந்த காலக்கெடுவை நிறைவு செய்து விட்டால் அவர்கள் தம் விஷயமாக நல்ல முறையில் முடிவு செய்வதில் உங்கள் மீது எந்தக்குற்றமும் இல்லை.நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கறிந்தவன்.(2: 234)

இதன் அடிப்படையில் 4 மாதம் 10 நாட்கள் என்று தெளிவாக இடம்பெறும் போது 40 நாட்கள், 1 மாதம் என்று நாமாக முடிவெடுக்க கூடாது.



**இத்தாவில் இருக்கும் பெண்ணின் நிலை:**

கணவன் இறந்த அன்றே அப்பெண்ணை தனி அறையில் விட்டு நகைகளை கழற்றி, வெள்ளை ஆடை மட்டும் அணிவித்து கண்ணாடி பார்க்க கூடாது என்றும், ஆண்களை பார்க்க கூடாது என்றும் எந்தளவிற்கென்றால் கர்ப்பிணியின் வயிற்றில் ஆண்குழந்தை இருக்கலாம் என்பதற்காக கர்ப்பிணியை கூட பார்க்க கூடாது என்றும் தன் சொந்த மகளாகவே இருந்தாலும் சரி உணவிற்காக வெளியே வரக்கூடாது அது உள்ளேயே கொடுக்கப்படும், சில இடங்களில் விளக்கு கூட வைக்க கூடாது, என்றும் கட்டுபாட்டில் வைத்து அந்த பெண்ணை இத்தா என்ற பெயரில் கொடுமைப்படுத்துகின்றனர். இது தவறாகும். இது போன்ற அறியாமை காலப் பழக்கங்கள் நபி (ஸல்) அவர்கள் காலத்தில் கூட நடந்தது.

ஹுமைத் பின் நாஃபிஉ ( ரஹ்) அவர்கள் கூறியதாவது:- நான் ஸைனப் பின்த் அபீஸலமா (ரலி) அவர்களிடம் ஆண்டின் முடிவில் ஒட்டகச்சாணத்தை எறிவாள்" என்றால் என்ன? என்று கேட்டேன்.அதற்கு அவர்கள்(பின் வருமாறு) கூறினார்கள். (அறியாமைக்காலத்தில்) ஒரு பெண்ணின் கணவன் இறந்து விட்டால் அவள் ஒரு சிறிய குடிசைக்குள் நுழைந்து கொண்டு தன் ஆடைகளிலேயே மிகவும் மோசமானதை அணிந்து கொள்வாள்.ஒரு வருடம் செல்லும் வரை எந்த நறுமணத்தையும் தொடமாட்டாள்.(ஓராண்டு கழிந்து) பிறகு கழுதை,ஆடு போன்ற கால்நடை ஒன்று,அல்லது பறவை ஒன்று அவளிடம் கொண்டு வரப்படும்.அதன் மீது(அழுக்கடைந்த தன் உடலைக்) கடுமையாகத் தேய்த்துக்கொள்வாள்.அவ்வாறு அவள் தேய்க்கும் எந்த உயிரினமும்(அவளது உடல் அசுத்தத்தால்) சாகாமல் இருப்பது அரிதேயாகும்.பிறகு அவள்(அந்த குடிசையிலிருந்து) வெளியே வருவாள்.அப்போது அவளிடம் ஒட்டகச் சாணம் கொடுக்கப்படும். உடனே அவள் அதை(தனக்கு முன் பக்கத்தில்) தூக்கி எறிந்து விடுவாள்.(இதுவே இத்தா முடிந்ததற்கு அடையாளமாகும்) பிறகு அவள் தான் விரும்பிய நறுமணத்தையோ,மற்றவைகளையோ பழையபடி உபயோகித்துக்கொள்வாள்.

நூல்: புகாரி-5337

மேற்கண்ட ஹதீஸின் படி அறியாமை காலத்தில் செய்தது போலவே இக்காலத்திலும் மக்கள் தவறான காரியத்தை செய்கிறார்கள் என அறிந்து கொள்ள முடிகிறது.ஆனால் இதை நபி(ஸல்) அவர்கள் அனுமதிக்கவில்லை.

**ஆடைகள்**

"அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்ட எந்தப்பெண்ணும் மூன்று நாட்களுக்கு மேல் துக்கம் கடைபிடிப்பதற்கு அனுமதியில்லை.கணவனுக்காகத் தவிர! ஏனெனில்(கணவன் இறந்து போன) அவள்(4 மாதம் 10 நாட்கள் துக்கம் கடைபிடிப்பாள் அப்போது) அஞ்சனம் தீட்டிக்கொள்ள மாட்டாள்.சாயமிடப்பட்ட ஆடையை அணிய மாட்டாள்.

நெய்வதற்கு முன் நூலில் சாயமிட்டுத் தயாரிக்கப்பட்ட (அஸ்ப் என்னும்) ஆடையை தவிர! என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்:உம்முஅதிய்யா,நூல்:புகாரி-5342

இதிலிருந்து இத்தாவிலிருக்கும் பெண் தயாரிக்கும் போதே சாயமிடப்பட்ட கலர் ஆடைகளை அணிவதில் தவறில்லை என்பதும்,கண் மை,அத்தர் போன்ற அலங்காரங்களை தவிர்த்து கொள்ள வேண்டும் என்பதும் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.எனவே இறந்தவருக்காக துக்கம் கடைப்பிடிப்பதும்,நறுமணம் தரும் பொருட்களையும்,அலங்கார பொருட்களையும் பயன் படுத்துவதை தவிர்ப்பதையும்,இத்தாவில் இருக்கும் பெண்கள் கடைபிடிக்க வேண்டும்.இந்நாள்களில் சாதாரண ஆடைகளை அணிவதோ,எண்ணெய் தேய்த்து தலைவாரவோ,நறுமணம் இல்லா பொருட்களை பயன் படுத்தி குளிக்கவோ தடையில்லை.தன் அவசர தேவைக்காக வெளியிடங்களுக்கும் கூட செல்லலாம்.இதில் எந்த தவறுமில்லை. ஆனால் இவற்றில் எதுவும் மறுமணத்தை தூண்டும் அளவிற்கு இருக்க கூடாது. இதே போல் "தலாக்" விடப்பட்ட பெண்களுக்கும் "இத்தா" உண்டு. இரண்டிலும் கால அளவுதான் வேறுபடுகிறதே தவிர இத்தா என்ற சட்டம் இரண்டிலும் ஒன்றுதான்.அதாவது மறுமணத்திற்கு காத்திருத்தல் என்பதாகும்.

எனவே இத்தா பற்றிய விளக்கங்களை தெளிவாக அறிந்து கொண்டு அறியாமை கால பழக்கத்திலிருந்தும் மாற்று மத கலாச்சாரங்களிலிருந்தும் தவிர்ந்து இஸ்லாமிய மார்க்கம் கூறிய அடிப்படையில் நடந்து கொள்ள அல்லாஹ் அருள் புரிவானாக. ஆமீன்

*******

## பெற்றோர்களின் பொறுப்புகளும் பிள்ளைகளின் கடமைகளும்

பொதுவாக மக்கள்,பெண் குழந்தையை ஒரு சுமையாகவே கருதுகிறார்கள்.பெண் குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவதில் உள்ள சிரமம்,அவர்கள் ஒழுக்கம் தவறி விடக்கூடாதே என்ற அச்சம்,திருமணம் செய்து வைக்க வேண்டுமே.அதற்கு பொருளாதாரம் இடம் தரவேண்டுமே என்ற பயம் போன்ற காரணங்களால்,பெண்களை பாரமாகக் கருதுகின்றனர்.

ஆனால் ஒரு முஸ்லிம்,பெண் குழந்தையை வெறுப்பதோ, சுமையாகக் கருதுவதோ கூடாது.பெண் குழந்தையை வளர்த்து ஆளாக்குவதில் உள்ள சிரமங்களைப் பொறுத்துக் கொண்டு, அக்குழந்தையை ஒழுக்க மிக்க பெண்ணாகவும் மார்க்கப் பற்றுள்ள பெண்ணாகவும் வளர்த்தால் மகத்தான நன்மை தேடி வரும் நம்மை நோக்கி!

ஒரு பெண்மணி தனது இரு பெண் குழந்தைகளுடன் யாசித்த வண்ணம் வந்தார். என்னிடம் அப்போது ஒரு பேரீச்சம் பழத்தை தவிர வேறு எதுவும் இல்லை. எனவே அதை



அவரிடம் கொடுத்தேன். அவர் அதை இரண்டாக பங்கிட்டு இரு குழந்தைகளுக்கும் கொடுத்துவிட்டார். அவர் அதிலிருந்து சாப்பிடவில்லை. பிறகு அவர் எழுந்து சென்று விட்டார். அப்போது நபி(ஸல்) அவர்கள் என்னிடம் வந்தார்கள். நான் அவர்களிடம் இச் செய்தியை கூறியதும் அவர்கள். இவ்வாறு பல பெண் குழந்தைகளால் யார் சோதிக்கப்படுகின்றாரோ அவருக்கு அக்குழந்தைகள் அவரைக் காக்கும் திரையாக ஆவார்கள் எனக் கூறினார்கள்.
அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி) அவர்கள், நூல் : புகாரி 1418

குழந்தைகள் நல்ல பெற்றோர்களை நரகிலிருந்து தடுக்கும் கேடயமாக இருப்பார்கள்.

சொர்க்கத்தில் நபி (ஸல்) அவர்களோடு...

ஒரு தாய் தன் பெண் குழந்தையை சிரமப்பட்டு, கஷ்டப்பட்டு நல்ல முறையிலும், மார்க்க நெறி முறையிலும் வளர்த்து வந்தால் மறுமை நாளில் இறுதி தூதரான நபி(ஸல்) அவர்களுடன் அமர்வதற்கு அல்லாஹ் வாய்ப்பளிப்பான்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், யார் இரு பெண்குழந்தைகளை, அவர்கள் பருவ வயதடையும்வரை பொறுப்பேற்று கருத்தாக வளர்க்கிறாரோ அவரும் நானும் மறுமை நாளில் இப்படி வருவோம் என்று கூறிவிட்டு,தம் விரல்களை இணைத்து காட்டினார்கள்.
அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள், நூல் : முஸ்லிம் (5127)

## குடும்பத்தை நரகிலிருந்து காப்பாற்றுதல்

நாம் நமது குடும்பத்தாரை நரக நெருப்பிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்றால் மார்க்கத்தை கற்றுத்தர வேண்டும். அவர்கள் மார்க்கத்தை கற்று அதன்படி நடந்தால் மறுமையில் தன்னையும், தனது குடும்பத்தாரையும் அல்லாஹ் காப்பற்றுவான். மார்க்கத்தை கற்பிக்கவில்லையென்றால் மறுமையில் தன் குடும்பத்தார்கள் நஷ்டமடைவார்கள் என்று அல்லாஹ் கூறுகிறான்.

நம்பிக்கை கொண்டோரே! உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் நரகை விட்டுக் காத்துக் கொள்ளுங்கள்! அதன் எரிபொருள் மனிதரும் கற்களுமாகும். அதன் மேல் கடுமையான,பலசாலியான வானவர்கள் உள்ளனர். தமக்கு அல்லாஹ் ஏவியதில் மாறு செய்ய மாட்டார்கள். கட்டளையிடப்பட்டதைச் செய்வார்கள். அல்குர்ஆன் 66:6

நமது குழந்தைகளை நல்லொழுக்கமுள்ளவர்களாக நாம் உருவாக்காமல் இருந்தால் மறுமையில் நமக்கு தண்டனை உறுதியாகிவிடும் இந்த தண்டனையிலிருந்து அல்லாஹ் நம்மை காப்பற்றுவானாக.

*******

## வாங்கிய கடனைப்பேணுவோம்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- எவன் மக்களின் பணத்தை ( அல்லது பொருட்களைத்) திருப்பிச் செலுத்தும் எண்ணத்துடன் கடன் வாங்குகின்றானோ அவன் சார்பாக அல்லாஹ் அதனைத் திருப்பிச் செலுத்துவான். எவன் திருப்பிச் செலுத்தும் எண்ணமின்றி அதை (ஏமாற்றி) அழித்து விடும் எண்ணத்துடன் கடன் வாங்குகின்றானோ அல்லாஹ்வும் அவனை அழித்துவிடுவான். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல் : புகாரி – 2387

......எவர் நல்ல முறையில் கடனைத் திருப்பிச் செலுத்துகின்றரோ அவரே உங்களில் சிறந்தவர்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி) நூல் : 2390, 2392, 2393

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:-

வசதியுள்ளவர் (தன் கடனை அடைக்காமல் கடன் கொடுத்தவரிடம் தவணை சொல்லி) தள்ளிப்போடுவது அநியாயமாகும்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி) - நூல் : புகாரி : 2400 முஸ்லிம் : 3185

நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர்,தான் கொடுத்த ஃ...னைத் திருப்பிக் கேட்டு வந்தார் அப்போது அவர் நபி(ஸல்) அவர்களிடம் சற்று கடுமையாக பேசினார். ஆகவே நபி(ஸல்) அவர்களின் தோழர்கள் அவரை தண்டிக்க விரும்பினார்கள். (இதை புரிந்த கொண்ட) நபி (ஸல்) அவர்கள், "அவரை விட்டுவிடுங்கள். கடன் கொடுத்தவருக்கு கடுமையாகப்பேச உரிமை உண்டு" என்று கூறினார்கள். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி) நூல் – புகாரி : 2401

இறைவா! கப்ருடைய வேதனையை விட்டும் உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறேன். தஜ்ஜாலின் குழப்பத்தை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். வாழும் போதும் மரணிக்கும் போதும் ஏற்படும் குழப்பத்தை விட்டும் உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறேன். பாவங்களை விட்டும் **கடனை விட்டும் உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறேன்.** என்று நபி (ஸல்) அவர்கள் தொழுகையில் சலாம் கொடுப்பதற்கு முன் துஆச் செய்வார்கள்: தாங்கள் கடனை விட்டும் அதிமாகப் பாதுகாப்புதேட காரணம் என்ன? என்று ஒருவர் நபி(ஸல்) அவர்களிடம் கேட்டபோது ஒரு மனிதன் கடன்படும் போது பொய் பேசுகிறான்; வாக்களித்து விட்டு அதை மீறுகிறான் என்று நபி (ஸல்) அவர்கள் விளக்கமளித்தார்கள்.

அறிவிப்பவர் : அயிஷா (ரலி) - நூல் : புகாரி 832, 2397,6368, 6375.



ஹிஜ்ரி 1432 வருடம் 2011

# தீனுல் இஸ்லாம் உதவும் குழு

DEENUL ISLAM HELPING GROUP
பதிவு எண்:146/05
No:04,குளத்து மேட்டுத்தெரு,திட்டச்சேரி-609 703

### மார்ச் 2011 முதல் ஜுன் 2011
### வரை வரவு - செலவுகள் விபரம்

## சந்தா வரவுகள்

| | | | |
|---|---|---|---|
| | **திட்டச்சேரி:** | | |
| | **காந்தி சாலை** | | |
| 1. | M.முஹம்மது ஷரீப் | -4- | 80 |
| 2. | E.மன்சூர் கனி | -4- | 40 |
| 3. | M.முஹம்மது இர்சாத் | -4- | 80 |
| 4. | F.ரஹ்மத் நிஷா | -4- | 400 |
| 5. | T.மலிக்குன் நிசா | -4- | 200 |
| 6. | S.M.முஹம்மது அமீருல் ஹாசிமீன் | -4- | 400 |
| 7. | A.முஹம்மது சாதிக் | -3- | 150 |
| 8. | M.செய்யது முபாரக் | -3- | 150 |
| 9. | A.நிஜாருல் அன்வர் | -4- | 80 |
| 10. | A.முஹம்மது தௌஃபீக் | -1- | 10 |
| 11. | A.மஹ்மதுன் கனி | -1- | 10 |
| | **உஸ்மானியா தெரு** | | |
| 12. | M.சமீர் பாசில் | -4- | 80 |
| 13. | மதீனா மன்ஜில் | -4- | 40 |
| 14. | A.அஜீஸ் தீன் | -4- | 200 |
| 15. | M.ஹசனுதீன் | -4- | 80 |
| 16. | A.அப்துல் ரஹீம் | -4- | 200 |
| 17. | J.அப்துல் ஹை | -4- | 40 |
| 18. | மெய்தீன் அலி ஆசாத் | -3- | 90 |
| 19. | A.ஹாஜா ஹசனுதீன் | -4- | 80 |
| 20. | M.முஹம்மது அலி ஜின்னா | -4- | 80 |
| 21. | M.ஹிதாயத்துல்லாஹ் | -3- | 150 |
| 22. | M.முஹம்மது பாரூக் | -3- | 150 |
| 23. | ஜெசிமா நிசா | -1- | 50 |
| 24. | நூருல் ஜெஹ்ரா | -4- | 80 |
| 25. | TMS.சாதுல் ஹமீது | -2- | 60 |
| 26. | B.கலீல் ரஹ்மான் | -5- | 50 |
| 27. | H.தமீமுல் அன்சாரி | -4- | 80 |

| | | | |
|---|---|---|---|
| 28. | சிக்கந்தர் பாதுஷா | -1- | 10 |
| 29. | K.மன்சூர் ஷா | -1- | 10 |
| 30. | L.பஷீர் | -3- | 150 |
| | **ஹாலியார் தெரு** | | |
| 31. | A.முஹம்மது அக்ரம் | -4- | 40 |
| | **குளத்து மேட்டுத்தெரு** | | |
| 32. | H.முஹம்மது அஸ்கர்தீன் | -4- | 80 |
| 33. | S.அப்துல் ரஹ்மான் | -4- | 80 |
| | **மேலத்தெரு** | | |
| 34. | S.ஹாஜா அலாவுதீன் | -4- | 400 |
| | **முடுக்குத்தெரு** | | |
| 35. | M.முஹம்மது காலித் | -4- | 80 |
| 36. | K.முஹம்மது ஷமீம் | -4- | 200 |
| 37. | A.குத்புதீன் | -4- | 200 |
| 38. | M.முஹம்மது ஹசனுதீன் | -4- | 200 |
| 39. | S.அப்துல் ஹாதி | -4- | 120 |
| 40. | N.ஹைதர் அலி | -2- | 100 |
| | **பட்டகால் தெரு** | | |
| 41. | P.M.ஹபீப் ரஹ்மான் | -4- | 200 |
| 42. | S.ரம்ஜான் கனி | -4- | 40 |
| 43. | M.முஹம்மது நாசருதீன் | -2- | 40 |
| | **புடவை கடைத்தெரு** | | |
| 44. | M.ஜபுருதீன் | -4- | 80 |
| | **புதுத்தெரு** | | |
| 45. | H.தௌபீக் | -4- | 120 |
| 46. | A.முஹம்மது லுத்ஃபி | -2- | 60 |
| 47. | M.பைசல் அமீன் | -3- | 150 |

| | | | |
|---|---|---|---|
| | **புதுமனைத்தெரு** | | |
| 48 | A.அமானுல்லாஹ் | -4- | 80 |
| 49. | R.ஜியாவுதீன் | -4- | 80 |
| 50 | M.முஹம்மது பௌஜன் | -3- | 60 |
| 51. | H.சாகுல் ஹமீது | -3- | 60 |
| 52 | S.இப்ராஹீம் | -1- | 20 |
| | **சலாமத்தெரு** | | |
| 53 | A.S.செய்யது பாத்திமா | -4- | 200 |
| | **தெற்குத்தெரு** | | |
| 54 | M.சாகுல் ஹமீது | -2- | 100 |
| 55 | S.M.அப்துல் சுக்கூர் | -3- | 60 |
| 56 | M.முஹம்மது காமில் | -1- | 30 |
| 57 | H.S.செய்யது அஹமது | -3- | 30 |
| | **தோட்டத்தெரு** | | |
| 58 | A.M.அப்சா கனி | -4- | 80 |
| 59. | A.சுல்தான் ரித்தாவுதீன் | -10- | 300 |
| | **வடக்குதெரு** | | |
| 60 | S.M.இப்ராஹீம் | -4- | 80 |
| 61. | H.A.ஜெஹபர் சாதிக் | -2- | 40 |
| | **வடக்குபட்டகால் தெரு** | | |
| 62 | S.S.அலியா மரைக்காயர் | -4- | 40 |
| 63 | Y.ஹபீப் ரஹ்மான் | -4- | 80 |
| | **புறா கிராமம்** | | |
| | **கட்டு மாவடி** | | |
| 64 | M.M.மெய்தீன் | -4- | 80 |
| 65 | O.S.நஜ்முதீன் | -4- | 120 |
| 66 | A.சாகுல் ஹமீது | -4- | 80 |
| 67 | K.P.அப்துல் ரஜாக் | -2- | 20 |
| 68 | M.சுல்தான் ஆரிஃப் | -4- | 80 |
| 69. | மன்சூர் அல்ஹாஜ் | -4- | 40 |
| 70. | நாசர் டெலிகாம் | -2- | 100 |
| 71. | தஸ்லிமா அம்ரின் | -3- | 60 |
| 72. | M.அன்சாரி | -2- | 20 |
| | **கிஸ்மத் தெரு** | | |
| 73. | A.M.அப்துஸ்ஸலாம் | -4- | 80 |
| 74. | K.அப்துர் ரஹீம் | -4- | 200 |
| 75. | A.தப்ரோஸ் முஹம்மது | -4- | 200 |

| | | | |
|---|---|---|---|
| | **மேலத்தெரு** | | |
| 76. | A.ராவுத்தர் ஷா | -4- | 120 |
| | **பள்ளிவாசல் தெரு** | | |
| 77. | J.சுலைமான் | -4- | 80 |
| 78. | M.ஆப்ரின் | -4- | 80 |
| 79. | M.ரபீக் அஹமது | -4- | 80 |
| 80. | M.E.முஹம்மது சரீஃப் | -4- | 100 |
| 81. | S.சாகுல் ஹமீது | -4- | 40 |
| 82. | S.சஹருான் பீவி | -4- | 40 |
| 83. | N.ஹாஜி | -4- | 120 |
| 84. | H.நவ்ஸாத் | -4- | 80 |
| 85. | S.சம்சுதீன் | -4- | 80 |
| 86. | A.பாவா பகுருதீன் | -4- | 40 |
| | **புதுத்தெரு** | | |
| 87. | A.ஹசனுதீன் | -4- | 40 |
| 88. | M.இப்ராஹீம் | -4- | 80 |
| 89. | M.I.ஷேக் தாவூத் | -4- | 80 |
| 90. | A.M.இஸ்மத் | -3- | 50 |
| 91. | K.முஹம்மது அசார் | -4- | 70 |
| | **தெற்குத்தெரு** | | |
| 92. | முனிரா ஆஃப்ரின் | -4- | 80 |
| 93. | S.அப்துர் ரஹீம் | -4- | 100 |
| 94. | A.தமிமுன் அன்சாரி | -4- | 80 |
| 95. | S.முஹம்மது பாரூக் | -1- | 20 |
| | **ப.கொந்தகை** | | |
| | **கோவில் பத்து தெரு** | | |
| 96. | M.முஹம்மது மெய்தீன் | -4- | 200 |
| 97. | A.சேக் தாவூது | -2- | 80 |
| | **நாகூர் சாலை** | | |
| 98. | I.ராசிக் அஹமது | -4- | 120 |
| 99. | H.ஜெஹபர் சாதிக் | -2- | 40 |
| | **பள்ளி வாசல் தெரு** | | |
| 100. | A.அப்துல் காதர் | -4- | 80 |
| 101. | A.முஹம்மது யூசுப் | -4- | 80 |
| 102. | S.முஹம்மது ரியாஸ் | -4- | 80 |
| 103. | A.மக்கா உசேன் | -4- | 200 |
| 104. | Z.பரக்கத் நிஷா | -3- | 60 |



| | | | |
|---|---|---|---|
| | **ராமலிங்கதெரு** | | |
| 105. | M.A.அஸ்கர் அலி | -4- | 400 |
| 106. | A.அன்வர் பாஷா | -4- | 250 |
| 107. | M.ஹாஜா மரைக்காயர் | -4- | 140 |
| | **வாழைத்தெரு** | | |
| 108. | M.அப்துல் வாஹித் | -3- | 90 |
| 109. | N.M.சித்திக் அன்வர் | -3- | 60 |
| 110. | S.முக்தர் தீன் | -1- | 20 |
| | **கடைத்தெரு** | | |
| 111. | தவக்கல்த் மொபைல்ஸ் | -3- | 90 |
| 112. | பர்வின் ஸ்டோர்ஸ் | -2- | 40 |
| 113. | பாரதி எலக்ட்ரானிக்ஸ் | -3- | 90 |
| 114. | ஹோட்டல் அல்சுகரி | -3- | 90 |
| 115. | உமா பேக்கரி | -2- | 20 |
| 116. | ஜம் ஜம் மளிகை | -2- | 40 |
| 117. | மாலிக் ஜெராக்ஸ் | -2- | 100 |
| 118. | பிஸ்மி கேபிள் | -2- | 40 |
| 119. | பிளாஸ்டிக் கடை | -2- | 20 |
| 120. | சபானா (Play Zone) | -3- | 60 |
| 121. | தீன் செல் சிட்டி | -2- | 100 |
| 122. | சிங்கப்பூர் ஃபேப்ரிக்ஸ் | -2- | 60 |
| 123. | பினாங்கு ஸ்டோர்ஸ் | -3- | 150 |
| 124. | பாலாஜி மளிகை | -3- | 90 |
| 125. | அகல்யா பேக்கரி | -2- | 60 |
| 126. | ஹோட்டல் மன்சூர் | -3- | 300 |
| 127. | நியூ இந்தோ எலக்ட்ரிகல்ஸ் | -3- | 60 |
| 128. | அஜ்மீர்அலி (இரும்புகடை) | -2- | 60 |
| 129. | ரஹ்மான் ஸ்டோர்ஸ்(கொந்தை) | -2- | 100 |
| 130. | ஆண்டவர் கூல்டிரிங்ஸ் | -2- | 60 |
| 131. | H.M.Y.டீ ஸ்டால் | -3- | 60 |
| 132. | கிளாசிக் கேபிள் | -3- | 300 |
| 133. | S.M.I.ஹார்டுவேர்ஸ் | -1- | 100 |
| 134. | அப்துல் ரஹ்மான் டீ கடை | -2- | 200 |
| 135. | ஷாலோம் பர்னிச்சர்ஸ் | -2- | 300 |
| 136. | தியாகம் பவர் மார்க்கெட்டிங்(நாகூர்) | -2- | 100 |
| 137. | சூப்கடை (அப்துல் ஆசிஃப்) | -2- | 20 |
| 138. | தங்கவேல் - உணவகம் | -1- | 50 |
| 139. | ஆசியா ஸ்டோர்ஸ் | -1- | 30 |

| | | | |
|---|---|---|---|
| | **காரைக்கால்** | | |
| 140. | பாத்திமா ஆட்டிக்கல்ஸ் | -4- | 400 |
| 141. | I.A.R.கோல்டு பேலஸ் | -2- | 100 |
| 142. | பிரைட் ஆட்டிக்கல்ஸ் | -3- | 150 |
| 143. | ஹைப்பர் டெக் | -4- | 400 |
| 144. | பிஸ்மி பர்னிச்சர்ஸ் | -3- | 150 |
| 145. | மௌரியா ரெஸ்ட்டாரண்ட் | -3- | 300 |
| | கூடுதல் | | **15,540** |

**நன்கொடை வரவுகள் :-**

**பொதுவான நன்கொடை வழங்கியவர்கள்:**

| | |
|---|---|
| 1.மில்லியன் மொபைல்ஸ், காரைக்கால். | 50 |
| 2.நாச்சியார் ஸ்டோர்ஸ், காரைக்கால். | 100 |
| 3.பாவா மெடிக்கல்ஸ், காரைக்கால். | 100 |
| 4.தீன் ஹார்டுவேர்ஸ், காரைக்கால். | 500 |
| 5.பிலால் மஹ்மூத், திட்டச்சேரி. | 200 |
| 6.அல்லாஹ்வின் அடியார்,கொந்தை. | 50 |
| 7.தமீஜுதீன், திட்டச்சேரி | 500 |
| 8.சிராஜீதீன், திட்டச்சேரி. | 3500 |
| 9.அப்துல் ஹலீம், திட்டச்சேரி. | 1000 |
| 10.அஸ்ரஃப், அலி, திட்டச்சேரி. | 100 |
| 11.அல்லாஹ்வின் அடியார், திட்டச்சேரி. | 1000 |
| 12.MASS CONSTRUCTION (விளம்பர உதவி ( 2010 நவ - பிப் 2011) | 500 |
| 13.J.V.C. மளிகை,திட்டச்சேரி. (விளம்பர உதவி ( 2010 நவ - பிப் 2011) | 300 |
| 14.லாத்தா சூப்பர் மார்க்கெட்,காரை. (விளம்பர உதவி ரமலான் மலர்) | 350 |
| 15.HYPER TECH, காரைக்கால். (விளம்பர உதவி ரமலான் மலர்) | 150 |
| 16.EVER 16, காரைக்கால். (விளம்பர உதவி ரமலான் மலர்) | 250 |
| 17.முஹம்மது சுபஹீத்,திட்டச்சேரி (தட்டு வண்டி வரி செய்ய) | 2000 |
| 18.முஜீபுர் ரஹ்மான்,திட்டச்சேரி (குடிசை மாற்று உதவி) | 1000 |
| 19.S.M.I.ஹார்டுவேர்ஸ்,திட்டச்சேரி (குடிசை மாற்று உதவி) | 1000 |

| 2011ம் ஆண்டு கல்வி உதவி வழங்கியவர்கள் | |
|---|---|
| 20.அல்லாஹ்வின் அடியார், ஹாஜியார் தெரு,திட்டச்சேரி. | 100 |
| 21.முஹம்மது ஷரீஃப்,காந்தி சாலை திட்டச்சேரி. | 1000 |
| 22 இப்ராஹீம்,காந்தி சாலை, திட்டச்சேரி. | 700 |
| 23.முஹம்மது தாஜீதீன்,புதுத்தெரு, திட்டச்சேரி. | 500 |
| 24.ஹாஜி முபாரக்,கீழத்தெரு, திட்டச்சேரி. | 200 |
| 25.அப்துல் காதர் BSc., புதுத்தெரு, திட்டச்சேரி. | 500 |
| **தோல் வரவுகள்** | |
| 26.முஹம்மது தௌஃபீக் 1-தோல் | 100 |
| 27.சல்மான் ஃபாரிஸ்,திட்டச்சேரி 1-தோல் | 120 |
| மொத்தம் | **15870** |

| திரும்ப பெறப்பட்ட கடன் வரவுகள் | |
|---|---|
| 1.கடன் அட்டை எண்1 -ன் வரவு | 2000 |
| 2.கடன் அட்டை எண்2-ன் வரவு | 2000 |
| 3.கடன் அட்டை எண்5-ன் வரவு | 1850 |
| 4.கடன் அட்டை எண்6 -ன் வரவு | 600 |
| திரும்ப பெற்ற பழைய கடன் வரவு | 6640 |
| மொத்தம் | **13090** |

**சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!**

நீங்கள் பெறக்கூடிய ரசீதுகளில் உங்கள் பெயர் தெளிவாக உள்ளதா என்பதை சரிபார்த்துக்கொள்ளுங்கள். இது வரவு செலவு விபரங்களை வெளியிடும்போது எங்களுக்கு பேருதவியாக இருக்கும்.

| மார்ச் 2011 முதல் ஜூன் 2011 வரை உள்ள செலவுகள் | |
|---|---|
| 1.வட்டியில்லாத கடன் உதவி (9 - நபர்) | 24700 |
| 2.குடிசை மாற்று உதவி (2- நபர்) | 4785 |
| 3.மருத்துவ உதவி மற்றும் வழிப்போக்கர் உதவி (3- நபர்) | 1355 |
| 4.கல்வி உதவி (1 நபருக்கு) | 330 |
| 5.பில்புக் மற்றும் கடன் பத்திரம் அடித்த செலவு | 1300 |
| 6.நவம்பர் 2010 - பிப்ரவரி 2011 வரை நோட்டீஸ் அடித்த செலவு(500) | 800 |
| 7.ஸ்டேஷனரி செலவு மற்றும் மற்றவை | 191 |
| 8.வசூலாளர் சம்பளம்(4- மாதம்) | 3200 |
| 9.கோவை பள்ளி கட்டுமான நன்கொடை | 400 |
| | 37061 |
| தள்ளுபடி செய்யப்பட்ட பழைய கடன்கள் | 2000 |
| | **39061** |

**ஜகாத் விபரம்**

(மார்ச்,ஏப்ரல்,மே,ஜூன்-2011)

| | வரவு | செலவு |
|---|---|---|
| 1.ஜகாத் முன்னிருப்பு | 8220 | |
| 2.ஜகாத் வரவு-யூசுப் அலி, திட்டச்சேரி. | 800 | |
| 3.ஜகாத் செலவுகள் | | |
| I.அல்ஹுதா அனாதை இல்லம் | | 500 |
| II.(இஸ்லாத்தை தழுவிய (நபர்-1) | | 1000 |
| III.வழிப்போக்கர் உதவி(2நபர்) | | 400 |
| IV.மருத்துவ உதவி (1 நபர்) | | 1745 |
| V.உதவித்தொகை 1குடும்பம் | | 500 |
| VI.வியாபார அபிவிருத்தி உதவி (2நபர்) | | 850 |
| VII.கல்வி உதவி | | 750 |
| VIII.குடிசை மாற்று உதவி 1நபர் | | 2475 |
| மொத்தம் | 9020 | 8220 |
| **தற்போதைய ஜகாத் கையிருப்பு** | 800 | |



| மார்ச் 2011 முதல் ஜூன் 2011 வரை உள்ள மொத்த வரவு செலவுகள் | வரவு | செலவு |
|---|---|---|
| 1. பிப்ரவரி 2011-வரை உள்ள கையிருப்பு | 18123 | |
| 2. சந்தா வரவுகள் (மார்ச் 2011 முதல் ஜூன் 2011 வரை) | 15540 | |
| 3. நன்கொடை வரவுகள் | 15870 | |
| 4. திரும்ப பெற்ற கடன் வரவுகள் | 13090 | |
| 5. மார்ச் 11 முதல் ஜூன் வரை 11 வரை உள்ள மொத்த செலவுகள் | | 39061 |
| | 62623 | 39061 |

**ஜூன் 2011ல் இறுதி இருப்பு 23,562/-**

## மெல்ல கொல்லும் புகைப்பழக்கம்

பல கொடிய பழக்கங்களால் மனிதன் இன்று தன்னை தானே மாய்த்து கொண்டு வருகிறான். எந்தளவிற்கு விஞ்ஞானம் வளர்ந்து. நோய்களுக்கு புது மருந்துகள் கண்டுபிக்கப்பட்டு வருகிறதோ அதே வேகத்தில் மனிதன் தீய பழக்கங்களால் தன்னை அழித்து கொள்ளும் கொடுமையும் அதிகரித்து வருகிறது.

மனிதனை கொஞ்சம் கொஞ்சமாக கொல்லக்கூடிய பழக்கங்களில் ஒன்று புகைப் பழக்கம். ஆண்கள் மட்டுமில்லாமல் பெண்களிடையே கூட இப்பழக்கம் ஊடுருவி வருவதாக செய்திகள் கூறுகின்றன. நம்முடைய சமுதாயத்து பெண்மணிகள் அக்கொடிய பழக்கத்திற்கு ஆளாகாமல் இருக்கவும். புகை பிடிக்கும் தன்னுடைய கணவன்மார்களையும் உறவினர்களையும் மற்றும் தம் குழந்தைகளையும் திருத்தவும் புகை பழக்கத்தின் பாதகங்கள் இங்கு விளக்கப்படுகின்றன.

புகைப்பிடிப்பதினால் காச நோய், நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய், இருதய நோய் மற்றும் குருதிக் ( இரத்தக் ) குழல் நோய்,புற்று நோய்,ஆண்மை குறைவிற்கான சாத்தியக்கூறுகள் ஏற்படுகின்றன. புகைப் பிடித்தல் உடல் நலத்திற்கு தீங்கானது என்று கொட்டை எழுத்துகளில் எழுதப்பட்ட பாக்கெட்டுகளிலிருந்து நாம் எடுத்து ஊதும் பீடி மற்றும் சிகரெட் தான் இந்த மாபாதகங்களை விளைவிக்கிறது.

புண்பட்ட மனதை புகைப்பிடித்து ஆற்று என விதண்டாவாதம் பேசி ஊதி தள்ளுவதால் ஏற்படும் ரணங்களுக்கு எந்த மருந்தும், மாத்திரைகளும் அந்த ரணங்களை ஆற்றாது என்பது அறிவியல் உலகம் கூறும் நிதர்சனமான உண்மை. எனவே தான் இத்தீமைக்கு எதிராக அரசுகளும், தன்னார்வ அமைப்புகளும் உலகளாவிய அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன.

உடல் திடகாத்திரத்தை குறிக்கும் வண்ணம் கல்லையும் சாப்பிட்டால் செமிக்க செய்யும் பருவம் என இளம் பருவத்தை பற்றி குறிப்பிடும் வழக்கம் நம்மிடையே உள்ளது. ஆனால் 20 வயதிற்கு உட்பட்டவர்கள் இனி சிகரெட் வாங்க முடியாது என உலகின் பல நாடுகளின் அரசுகள் அறிவித்து இருப்பது புகை பிடித்தலின் கொடுமையை உணர போதுமானது.

புகையிலை உபயோகத்தை கட்டுப்படுத்த, குறிப்பாக கல்லாதவர்களிடமும் ஏழைகளிடமும் தக்க விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கைகள் என இக்கொடுமைக்கு எதிராக அரசாங்கங்களும் களம் இறங்கியுள்ளன. இருந்தபோதிலும் மக்களை கவரும் விளம்பரங்களுடன் புகையிலை நிறுவனங்கள் விளம்பரச் சந்தையில். மக்களை சிறிது சிறிதாக அழிக்க கங்கனம் கட்டிகொண்டு நிற்கின்றன.

மிகக் கொடிய தாக்கத்தை ஏற்படுத்தும் புகைப்பழக்கத்தை பற்றி இஸ்லாமிய மார்க்கம் என்ன தான் சொல்கிறது?

புகைபிடித்தல் என்பது மார்க்கத்திற்கு மாற்றமாக ஒரு வீணாண காரியமாகும். இது உடலுக்கு கேடானது மற்றுமல்லாமல் வீண்விரையமாகும். நம்முடைய உடலுக்கு நாம் தீங்கிழைத்துக் கொள்வதை திருமறைக் குர்ஆன் கடுமையாகக் கண்டிக்கிறது.

உங்கள் கைகளால் நாசத்தை தேடிக் கொள்ளாதீர்கள் (அல்குர்ஆன் 2: 195)

உங்களையே கொன்று விடாதீர்கள்! அல்லாஹ் உங்கள் மீது நிகரற்ற அன்புடையோனாக இருக்கிறான். (அல்குர்ஆன் 4 : 29)

வீண் விரையம் செய்யாதீர்கள்! வீண் விரையம் செய்வோரை அவன் நேசிக்க மாட்டான். (அல்குர்ஆன் : 6 : 141)

உண்ணுங்கள்! பருகுங்கள்! வீண் விரையம் செய்யாதீர்கள்! வீண் விரையம் செய்வோரை அவன் விரும்ப மாட்டான் (அல்குர்ஆன் : 7 : 31)

மேற்கண்ட வசனங்கள் அனைத்தும் புகைபிடித்தல் எவ்வளவு கடுமையான குற்றம் என்பதை நமக்கு தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. இறைவன் ஒரு செயலை தடைசெய்து விட்டான் என்றால் அதை தவிர்த்து கொள்ள வேண்டும். மாறாக அதைப் பற்றி வீணாண கேள்விகளைக் கேட்பது கூடாது. புகை பிடித்தல் என்பது ஒரு மோசமான, தடை செய்யப்பட்ட காரியமாகும். இதனை எல்லாக் காலங்களிலும் கண்டிப்பாகத் தவிர்த்து கொள்ள வேண்டும்.

இது மட்டுமின்றி நாம் புகைப்பிடித்து கரியாக்கும் ஒவ்வொரு காசுக்கும் வல்ல ரஹ்மானிடம் பதில் சொல்லியாக வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.



எல்லாவற்றிற்கும் மேலாக ஆரோக்கியமும், உடலும் வல்ல அல்லாஹ் கொடுத்த வரங்கள். அதை நம்முடைய கைகளால் பாழ்படுத்திக் கொள்வதைப்பற்றி மறுமையில் கேள்வி உண்டு.

பின்னர் அந்நாளில் அருட்கொடை பற்றி விசாரிக்கப்படுவீர்கள் (அல்குர்ஆன் 102: 8)

புகைப்பிடிப்பவர்கள் புகைப்பிடித்தல் தன்னுடைய உடல் ஆரோக்கியத்தை கெடுத்துக்கொள்வது மட்டுமின்றி தன்னை சுற்றி இருப்பவர்களின் ஆரோக்கியத்தையும் கெடுக்கின்றனர். இவ்வாறு செய்வது ஒரு இறை நம்பிக்கையாளனின் பண்பாக இருக்காது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவரது நாவு மற்றும் கையின் தொல்லைகளிலிருந்து பிற முஸ்லிம்கள் பாதுகாப்புப் பெறுகிறார்களோ அவரே (உண்மையான) முஸ்லிம் ஆவார். எவர் அல்லாஹ் தடை விதித்தவற்றிலிருந்து விலகிக்கொண்டாரோ அவரே முஹாஜிர் ( துறந்தவர் ) ஆவார். அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) நூல் : புகாரி (10)

எனவே மறுமையை நம்பக்கூடிய ஒவ்வொரு முஸ்லிமும் புகைப்பழக்கம் என்ற கொடிய பழக்கத்தை விட்டு ஒதுங்கி, வல்ல இறைவனிடம் பாவமன்னிப்பு தேடி, மற்றவர்களின் உடல் நலத்தையும் கெடுக்காமல் இருக்க சபதம் எடுக்க வேண்டும். இல்லையெனில் அல்லாஹ்வின் பிடி மிகவும் கொடியது என மனதில் பதிய வைத்து கொள்ள வேண்டும்.

இக்கொடிய பழக்கத்திற்கு எதிராக பெண்களும் களம் இறங்கி இப்பழக்கத்திற்கு ஆளாகி இருக்கும் தன்னுடைய குடும்ப ஆண்களையும் திருத்த முயற்சி செய்ய வேண்டும்.

நம்பிக்கை கொண்ட ஆண்களும் பெண்களும் ஒருவர் மற்றவருக்கு உற்ற நண்பர்கள் அவர்கள் நன்மையை ஏவுவார்கள். தீமையைத் தடுப்பார்கள். தொழுகையை நிலை நாட்டுவார்கள். ஜகாத்தையும் கொடுப்பார்கள். அல்லாஹ்வுக்கும். அவனது தூதருக்கும் கட்டுப்படுவார்கள். அவர்களுக்கே அல்லாஹ் அருள்புரிவான். அல்லாஹ் மிகைத்தவன்; ஞானமிக்கவன். (அல்குர்ஆன்-9 :71)

வல்ல ரஹ்மான் நம் அனைவரையும் ஷைத்தானின் அனைத்து வித தீங்குகளிலிருந்தும் காப்பாற்றுவானாக.

இங்ஙனம்

**தீனுல் இஸ்லாம் உதவும் குழு**

எண்.4, குளத்துமேட்டுத்தெரு, திட்டச்சேரி - 609 703.

தொடர்புக்கு : 9543812048, 9894494219, 9894389474.


எக்ஸ்பிரஸ் பிரிண்டர்ஸ் 61, மஸ்தான் பள்ளி வீதி, காரைக்கால் - செல்: 9842653188

வாடிக்கையாளர்களுக்கு எங்கள் ரமலான் நல்வாழ்த்துக்கள்

நாகை உமா பேக்கரி

கிளை : திட்டச்சேரி

**கேக், பப்ஸ் மற்றும் இனிப்பு, கார வகைகள் வாங்க சிறந்த இடம்:**

எங்களிடம் உங்கள் வீட்டுத்திருமணம் மற்றும் இதர சுப நிகழ்ச்சிகளுக்கு ஆர்டரின் பேரில் கேக், பப்ஸ், மற்றும் இனிப்பு கார வகைகள் உங்கள் விருப்பத்திற்கேற்ப நல்ல முறையில் தயாரித்து, நாகை உமா பேக்கரியின் விலைக்கே இங்கு கொடுக்கப்படும்.

எல்லா நாட்களும் கடை உண்டு.

கடை எண்: 4, பேருந்து நிலையம், திட்டச்சேரி.

**போன்: 04365 - 235005, செல்: 96265 18369**

ரமலான் மாதம் எத்தகையதென்றால், அதில் தான் மனிதர்களுக்கு வழி காட்டியாகவும் (சத்தியத்தையும், அசத்தியத்தையும்) பிரித்து அறிவிக்கக்கூடிய தெளிவான விளக்கமாகவும் உள்ள குர்ஆன் இறக்கிஅருளப்பட்டது. எனவே உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ அவர் அதில் நோன்பு நோற்கவும். (ஆனால் ) எவரேனும் நோயாளிகவோ அல்லது பயணத்திலோ இருந்தால் (அவற்றை) பின் வரும் நாட்களில் கணக்கிட்டு (நோன்பு நோற்று) கொள்ளவும். அல்லாஹ் உங்களுக்கு இலகுவானதையே நாடுகிறான். உங்களுக்கு சிரமமானதை அவன் நாடவில்லை. (விடுபட்ட நோன்பை நோற்று) எண்ணிக்கையை நீங்கள் நிரப்பமாக்கவும் அல்லாஹ்வை – உங்களுக்கு அவன் நேர்வழி காட்டியதற்காக நீங்கள் பெருமைபடுத்துவதற்காகவும் இன்னும் நன்றி செலுத்துவோராக ஆவதற்கும் (அல்லாஹ் இதைகொண்டு நாடுகிறான்).

செல் : 95667 13892

LA - THIRA

Super Market

லா-திரா சூப்பர் மார்க்கெட்

அனைத்து சுப நிகழ்ச்சிகளுக்கும் விலையில் சிறப்பு சலுகை அளிக்கப்படும். இலவச டோர் டெலிவரி உண்டு.

**87, மெய்தீன் பள்ளி வீதி,**

(அன்னை தெரஸா பெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில்)

**காரைக்கால் - 609602.**



அல்லாஹ்வின் திருப்பெயரால்...

திட்டச்சேரியில் ஓர் புதிய உதயம்



**ஆயிஷா** டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ்

எங்களிடம் புத்தம் புதிய டிசைன்களில் ரெடிமேட் ஆடைகள், **குழந்தைகளுக்கான** ரஸகலி, மஸகலி, பட்டியாலா, மிடி, சரார்ரா, ஷாட், **சிறுவர்களுக்கான** பேண்ட் சர்ட், டீ சர்ட் கோட்சூட், ஜீன்ஸ் பேண்ட், **பெண்களுக்கான** சுடிதார் மெட்டிரியல்ஸ், புடவை ரகங்கள், பாவாடைகள், **ஆடவர்களுக்கான** ஜீன்ஸ் பேண்ட், சர்ட் T-SHIRT, கைலிகள், வேஷ்டிகள் மற்றும் அனைத்து வகையான **காலணிகளும்** மிகக் குறைந்த விலையில் நிறைந்த தரத்துடன் வாங்க அன்புடன் அழைக்கிறோம்.



**மஹான் மன்சூர் வலியுல்லாஹ் தர்கா எதிரில்,**

கடைத்தெரு, திட்டச்சேரி. செல் : 8870429942



**எக்ஸ்பிரஸ் பிரிண்டர்ஸ்** 61, மஸ்தான் பள்ளி வீதி, காரைக்கால் - செல்: 9842653188